ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவண்வண்டூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவண்வண்டூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## திருவாய்மொழி – வைகல் பூங்கழி

‡ வைகல் பூங்கழிவாய் ⋆
வந்து மேயும் குருகினங்காள் ⋆
செய் கொள் செந்நெல் உயர் ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
கை கொள் சக்கரத்து ⋆
என் கனிவாய் பெருமானைக் கண்டு ⋆
கைகள் கூப்பிச் சொல்லீர் ⋆
வினையாட்டியேன் காதன்மையே ‖ **6.1.1** ‖

காதல் மென் பெடையோடு ⋆
உடன் மேயும் கரு நாராய் ⋆
வேத வேள்வி ஒலி முழங்கும் ⋆
தண் திருவண்வண்டூர் ⋆
நாதன் ஞாலம் எல்லாம் உண்ட ⋆
நம் பெருமானைக் கண்டு ⋆
பாதம் கை தொழுது பணியீர் ⋆
அடியேன் திறமே ‖ **6.1.2** ‖

திறங்கள் ஆகி எங்கும் ⋆
செய்கள் ஊடுழல் புள் இனங்காள் ⋆
சிறந்த செல்வம் மல்கு ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
கறங்கு சக்கரக்கைக் ⋆
கனிவாய்ப் பெருமானைக் கண்டு ⋆
இறங்கி நீர் தொழுது பணியீர் ⋆
அடியேன் இடரே ‖ **6.1.3** ‖

இடரில் போகம் மூழ்கி ⋆
இணைந்தாடும் மடவன்னங்காள் ! ⋆
விடலில் வேத ஒலி முழங்கும் ⋆
தண் திருவண்வண்டூர் ⋆
கடல மேனிப் பிரான் ⋆
கண்ணனை நெடுமாலைக் கண்டு ⋆
உடலம் நைந்தொருத்தி ⋆
உருகும் என்றுணர்த்துமினே ‖ **6.1.4** ‖

உணர்த்தல் ஊடல் உணர்ந்து ⋆
உடன் மேயும் மடவன்னங்காள் ⋆
திணர்த்த வண்டல்கள் மேல் ⋆
சங்கு சேரும் திருவண்வண்டூர் ⋆
புணர்த்த பூந்தண் துழாய் முடி ⋆
நம் பெருமானைக் கண்டு ⋆
புணர்த்த கையினராய் ⋆
அடியேனுக்கும் போற்றுமினே ‖ **6.1.5** ‖

போற்றி யான் இரந்தேன் ⋆
புன்னை மேல் உறை பூங்குயில்காள் ⋆
சேற்றில் வாளை துள்ளும் ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
ஆற்றல் ஆழி அங்கை ⋆
அமரர் பெருமானைக் கண்டு ⋆
மாற்றம் கொண்டருளீர் ⋆
மையல் தீர்வதொரு வண்ணமே ‖ **6.1.6** ‖

ஒரு வண்ணம் சென்று புக்கு ⋆
எனக்கொன்றுரை ஒண் கிளியே ⋆
செருவொண் பூம் பொழில் சூழ் ⋆
செக்கர் வேலை திருவண்வண்டூர் ⋆
கரு வண்ணம் செய்ய வாய் ⋆
செய்ய கண் செய்ய கை செய்ய கால் ⋆
செருவொண் சக்கரம் சங்கு ⋆
அடையாளம் திருந்தக் கண்டே ‖ **6.1.7** ‖

திருந்தக் கண்டெனக்கொன்றுரையாய் ⋆
ஒண் சிறு பூவாய் ⋆
செருந்தி ஞாழல் மகிழ் ⋆
புன்னை சூழ் தண் திருவண்வண்டூர் ⋆
பெரும் தண் தாமரைக் கண் ⋆
பெரு நீள் முடி நால் தடந்தோள் ⋆
கரும் திண் மா முகில் போல் ⋆
திருமேனி அடிகளையே ‖ **6.1.8** ‖

அடிகள் கை தொழுது ⋆
அலர்மேல் அசையும் அன்னங்காள் ⋆
விடிவை சங்கொலிக்கும் ⋆
திருவண்வண்டூர் உறையும் ⋆
கடிய மாயன் தன்னைக் ⋆
கண்ணனை நெடுமாலைக் கண்டு ⋆
கொடிய வல் வினையேன் ⋆
திறம் கூறுமின் வேறு கொண்டே ॥ **6.1.9** ॥

வேறு கொண்டும்மை யான் இரந்தேன் ⋆
வெறி வண்டினங்காள் ⋆
தேறு நீர்ப் பம்பை ⋆
வடபாலைத் திருவண்வண்டூர் ⋆
மாறில் போர் அரக்கன் ⋆
மதிள் நீறெழச் செற்றுகந்த ⋆
ஏறு சேவகனார்க்கு ⋆
என்னையும் உளள் என்மின்களே ॥ **6.1.10** ॥

‡ மின் கொள் சேர் புரிநூல் குறளாய் ⋆
அகல் ஞாலம் கொண்ட ⋆
வன் கள்வன் அடிமேல் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
பண் கொள் ஆயிரத்துள் இவை பத்தும் ⋆
திருவண்வண்டூர்க்கு ⋆
இன் கொள் பாடல் வல்லார் ⋆
மதனர் மின்னிடை அவர்க்கே ॥ **6.1.11** ॥

திரு கமலவலீ நாச்சியார் சமேத பாம்பணையப்பன் திருவடிகளே சரணம்